Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

THURSDAY, SEPTEMBER 12 2024

வியாழக்கிழமை செப்டெம்பர் 12, 2024 | ஒளி: 10 கதிர் 049 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

21/4 தாக்குதலின் பிரதான சூத்திரதாரிக்கு

# “தராதரம் பாராது தண்டனை”

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பு பேராயர் உத்தியோகபூர்வ இல்லத்தில் புதன்கிழமை(11) காலை இடம்பெற்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு வாக்குறுதியளித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நியமிக்கப்படுகின்ற நீதிமன்ற கட்டமைப்புக்கு தாம் தோள் கொடுப்பதாகவும், நீதிமன்ற கட்டமைப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், இதற்காக மேற்கொள்ள வேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை முறையாகச் செயல்படுத்துவோம் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு வாக்குறுதியளித்தார்.

அவ்வாறே, உயர்த்து ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதோடு, இதன் பிரதான சூத்திரதாரிக்குத் தகுதி தராதரம் பாராது தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.



## கெஹலியவுக்கு பிணை

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல உட்பட மூவரை பிணையில் விடுதலை செய்ய மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் புதன்கிழமை (11) உத்தரவிட்டுள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுளின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல 2024 பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த பிணை மனு கடந்த 7 மாத காலமாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் இந்த பிணை உத்தரவு புதன்கிழமை (11) நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது.





## “சமூகத்திற்கு மீண்டும் அன்பையும், நேசத்தையும், கொண்டுவர வேண்டும்”

எங்களுடைய சமூகம் ஒருவருக்கொருவர் பாதுகாப்பற்ற நாடாக மாறியிருக்கிறது. பெண்களுக்குச் சிறுமிகளுக்குப் பாதுகாப்பற்று இருக்கிறது. பிறரின் வேதனையின்போது அதிர்ச்சியற்ற சமூகமாக மாறியிருக்கிறது எனத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க, சமூகத்திற்கு மீண்டும் அன்பையும், நேசத்தையும், கொண்டுவர வேண்டுமென வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2



## அடித்த அதிபரை வெளியேற்றுமாறு பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட கந்தப்பளை நு/கோட்பெல் தமிழ் வித்தியாலயத்தில் இம்முறை 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் மீது அதிபர் கடுமையாக தாக்கியதால் கடுங்காயங்களுக்கு உள்ளான ஏழு மாணவர்கள் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## வாக்களிக்க இரண்டும் தேவை



வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் மற்றும் நாட்டில் வசிப்பவர்கள் வாக்காளர் அட்டை இல்லாமல் கூட வாக்களிக்க முடியும் என நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (பெஃப்ரல்) அமைப்பின் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இறுதி தருணங்களில் வெளிநாடுகளில் இருந்து வாக்களிக்கும் நோக்குடன் நாடு திரும்பும் இலங்கையர்கள் தமக்கு வாக்காளர் அட்டை கிடைக்கவில்லை என கவலைப்படத் தேவையில்லை என அவர் கூறினார்.

தொடர்ச்சி P2



## “கிளிநொச்சியிலும் வீணையை இசைக்க முடியும்”

கிளிநொச்சியில் ஈ.பி.டி.பி. கட்சியின் பெயரையோ, கட்சியின் செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தாவையோ முன்னிலைப்படுத்தி அரசியல் செய்ய முடியாது என்று வியாக்கியானம் கொடுத்தவர்களுக்கும் ஆய்வுக் கட்டுரை எழுதி சுயஇன்பம் அடைந்தவர்களுக்கும் கிளிநொச்சி மக்கள் (செருப்புக்களைக் கழற்றி அடிப்பதற்கு ஒப்பான) பதில் அளித்துள்ளார்கள் என ஈ.பி.டி.பி. விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## இன்று மட்டுமே இறுதி வாய்ப்பு

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்குகளை அளிப்பதற்கு இன்று (12) வியாழக்கிழமை இறுதி வாய்ப்பு உள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 4, 5 மற்றும் 6ஆம் திகதிகளில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில், அன்றைய தினங்களில் வாக்களித்த தவறிய அனைத்து அரச ஊழியர்களும் வாக்களிக்க செவ்வாய்க்கிழமை (11) சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## தமிழ் பொது வேட்பாளருக்கு பொலிஸார் இடையூறு

வி.ரி.சகாதேவராஜா

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளர் அரியத்தின் அம்பாறை விஜயத்தின்போது பொலிஸார் இடையூறு விளைவித்துள்ளனர்.

கல்முனை-பெரிய நீலாவணையில் தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக ஆலயத்துக்குச் சென்று திரும்பியதும் பொலிஸார் இடையூறு விளைவித்தனர்.

தேர்தல் பிரசாரத்தின் போது, சின்னம் பதித்த ரீசேட் கொடிகளைத் தாங்கினால் கைது செய்வோம் என்று பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## வாக்காளர் அட்டை விநியோகம் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்காளர் அட்டை விநியோகிக்கும் நடவடிக்கை இறுதிக்கட்டத்தில் உள்ளதாக சிரேஷ்ட பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்களத்தின் ஊடாக இதுவரையில் 10 மில்லியனுக்கும் அதிக வாக்காளர் அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக அவர் புதன்கிழமை (11) கூறியுள்ளார்.

அடுத்த சில நாட்களில் எஞ்சியுள்ள வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் என்றும், எதிர்வரும் 14ஆம் திகதிக்குள் இந்த நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## “வேண்டும் ரணில்; மீண்டும் ரணில்”

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில், 2024 ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடும் வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவை ஆதரித்து மாத்தளை மாவட்டத்தின் ஓபல்கல, ஹுணுகல ஆகிய இடங்களில் புதன்கிழமை (11) “வேண்டும் ரணில், மீண்டும் ரணில்” ஜனாதிபதி தேர்தல் பிரசார கூட்டம் நடைபெற்றது.

மேலும், இப் பிரசார கூட்டங்களில் மாத்தளை மாவட்ட நகர்ப்புற மற்றும் தோட்டங்களை உள்ளடக்கிய வகையிலான பெருந்திரலான மக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

தொடர்ச்சி P2





## பிரசாரங்களில் சிறுவர்களை பயன்படுத்த வேண்டாம்

தேர்தல் பிரசாரங்களுக்கு சிறுவர்களைப் பயன்படுத்த வேண்டாம் என அரசியல் கட்சிகளுக்குத் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் அறிவுறுத்தியுள்ளன.

தேர்தல் பிரசாரத்திற்கு சிறுவர்களைப் பயன்படுத்திய வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக “குழந்தைகளைக் காப்பாற்று” தேசிய இயக்கம் தேர்தல் ஆணையத்திடம் புதன்கிழமை (11) முறைப்பாடு செய்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# அடித்த அதிபரை வெளியேற்றுமாறு பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்

கடுமையாக மாணவர்களைத் தண்டித்த அதிபருக்கு எதிராக மாணவர்களின் பெற்றோர் ராகலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த பாடசாலையின் அதிபரை இடமாற்றம் செய்யக் கோரியும் பாடசாலை அதிபருக்குத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் நுவரெலியா வலயக் கல்வி காரியாலயத்திற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

எனினும், இதுவரை உரியத் தீர்வு கிடைக்காத காரணமாகவே பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து புதன்கிழமை (11) குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளதாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் கூறுகையில்,

பாடசாலையின் அதிபரினால் கடந்த சனிக்கிழமை (7) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கல்வி கருத்தரங்குக்குச் செல்லாத ஏழு மாணவர்களைப் பிரம்பால் தாக்கியதாகவும் இதனால் அவர்கள் நடக்கக் கூட முடியாது உள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும் குறித்த அதிபர் பாடசாலைக்கு மாணவர்களை அழைத்து வரும் பெற்றோர்களிடம் தகாத வார்த்தைகளால் பேசுவதாகவும், தற்போது நியமிக்கப்பட்டுள்ள அதிபர் நிர்வாகத் திறன் அற்றவராக உள்ள நிலையில் உடனடியாக அவரை மாற்றி புதிய அதிபரை நியமிக்குமாறும் கோரியுள்ளனர்.

## இன்று மட்டுமே இறுதி வாய்ப்பு

இந்த நிலையில், இந்த மூன்று நாட்களிலும் தபால் மூல வாக்குகளைப் பயன்படுத்தத் தவறியவர்களால், ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் செப்டம்பர் 21ஆம் திகதி அல்லது வேறு எந்த நாளிலும் வாக்களிக்க முடியாது என தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, தபால்மூல வாக்களிப்பைப் பயன்படுத்தும் வாக்காளர்கள் தமது பணியிடங்கள் அமைந்துள்ள மாவட்டத்தில் உள்ள மாவட்ட தேர்தல் அலுவலகம் அல்லது பிரதேச செயலாளர் அலுவலகத்துக்கு இன்று (12) சென்று வாக்களிக்க முடியும்.

இந்த இறுதி சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால், தேர்தல் நடத்தப்படும் தினத்தில் அந்த வாக்கைப் பயன்படுத்த முடியாது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## வாக்காளர் அட்டை விநியோகம் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது

அத்துடன், எதிர்வரும் 14ஆம் திகதிக்குள் வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள், தமது அடையாள அட்டையுடன் தங்கள் பிரதேசத்தில் உள்ள தபால் நிலையத்துக்குச் சென்று வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தேர்தல் நடைபெறும் தினம் வரை வாக்காளர்களுக்கு தமது வாக்காளர் அட்டைகளைப் பெறுவதற்குச் சந்தர்ப்பம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# வாக்களிக்க இரண்டும் தேவை

இது தொடர்பில் ஊடகங்களுக்கு புதன்கிழமை (11) கருத்து வெளியிட்ட ரோஹண ஹெட்டியாராச்சி, "வெளிநாடுகளிலிருந்து இறுதித் தருணத்தில் நாட்டுக்கு வருவோரால் தமது வாக்குகளைப் பயன்படுத்த முடியுமா? என கேள்வி எழுப்புகின்றனர். ஆம். அவ்வாறானவர்களால் வாக்களிக்க முடியும்.

வாக்காளர் அட்டை இருந்தாலும் இல்லாவிட்டாலும் வாக்களிக்க முடியும். எனினும், இரண்டு விடயங்கள் குறித்து அவர்கள் அவதானம் செலுத்த வேண்டும். முதலில் தமது பெயர் இந்த வருடத்துக்கான தேர்தல் இடாப்பில் உள்ளதா? என்று பார்க்க வேண்டும். இரண்டாவது அவர்களது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். இந்த இரண்டு விடயத்தையும் உறுதிப்படுத்தினால் யாராக இருந்தாலும் வாக்களிக்க முடியும்.

எனவே வாக்காளர் அட்டை கிடைக்கவில்லை என்பதால் தம்மால் வாக்களிக்க முடியுமா என யாரும் யோசிக்கத் தேவையில்லை" என அவர் மேலும் கூறினார்.

# தமிழ் பொது வேட்பாளருக்கு பொலிஸார் இடையூறு




அத் தருணம் அங்கு இரு சாராருக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. விசேட அதிரடிப் படையினரும் நின்றனர்.

இந்நிலையில், அவ்விடத்திலிருந்த காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கூறுகையில்

"சிங்கள பேரினவாதம் என்றும் சிறுபான்மையினரின் உரிமையை நசுக்கிக் கொண்டு தான் இருக்கிறது, தென்னிலங்கை பெரும்பான்மையின வேட்பாளர்களின் பொதுக்கூட்டங்களில், வாகன தொடரணியில், பிரச்சார நடை பவனியில் தடுக்கப்படாத sticker, t-shirt, கொடிகள் தமிழ்ப் பொது வேட்பாளரின் கூட்டத்தில் மட்டும் தடுக்கப்படுவது ஏன்"? என்று வினவினார்.

இதேவேளை, இலங்கை நாட்டில் தமிழருக்கு ஒரு சட்டம் சிங்களவருக்கு ஒரு சட்டமா? இதனால் தான் நாம் எமது அரசியல் உரிமைக்காக இந்த தேர்தலில் போட்டியிடுகின்றோம் என்றார்.

# பிரசாரங்களில் சிறுவர்களை பயன்படுத்த வேண்டாம்

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் "குழந்தைகளைக் காப்பாற்று" தேசிய இயக்கத்தின் அழைப்பாளர் பிரியந்த ஹேரத், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடு செய்த போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, இந்த விடயத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு உண்டு என தெரிவித்துள்ளார்.

இவையெல்லாம் தேர்தல் ஆணையம் நினைவூட்ட வேண்டிய விடயங்கள் அல்ல என்றும் அவர் கூறினார்.



# "சமூகத்திற்கு மீண்டும் அன்பையும், நேசத்தையும், கொண்டுவர வேண்டும்"

சிரிப்பு இல்லாத வறண்ட ஒரு சமூகம் எம்மெதிரில் இருக்கிறது. ஏனைய எல்லாத்துறைகளும் போன்றே இந்த சமூகத்தையும் குணப்படுத்துகின்ற பொறுப்பு அரசாங்கம் என்ற வகையில் எமக்கும் அதன் முனைப்பான ஒரு பங்கு உங்களுக்கும் கையளிக்கப்பட்டுள்ளதென நாங்கள் நம்புகிறோம். சமூகத்திற்கு மீண்டும் அன்பையும், நேசத்தையும், புத்துணர்வையும் கொண்டுவர வேண்டும். அதற்காக பல துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி கலைஞர்களின் தேசிய மாநாடு - காசல் வீதி தெப்ரொபேன் மண்டபத்தில், ஞாயிற்றுக்கிழமை (08) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வறண்டு போன மனித சமூகமொன்றை எம்மெதிரில் இருக்கின்றது.

நீங்கள் எவ்வளவுதான் உயர் படைப்புக்களைச் செய்தாலும் அதனை சமூகத்திடம் கொண்டு செல்ல முடியுமா எனும் கேள்வி எழுகிறது. குடும்பத்தவர்களுடன் இறுதியாகத் திரைப்படமொன்றைப் பார்க்க, மேடை நாடகமொன்றைக் கண்டுகளிக்க அரங்கிற்கு எப்போது சென்றீர்கள் என ஊரில் போய் கேட்டுப் பாருங்கள். பெரும்பான்மையினருக்கு அப்படிப்பட்ட அனுபவமொன்று கிடையாது என்றார்.

புதிதாக வெளியான நாவலொன்றை வாசித்தீர்களா, புதிதாக வெளியாகிய கவிதை நூல் ஒன்றின் கவிதையை ரசித்தீர்களா எனக்கேட்டுப் பாருங்கள். அவையொன்றுமே கிடையாது. வறண்டு போன மனித சமூகமொன்றை எம்மெதிரில் இருக்கின்றது. நாடக அரங்குகள், சினிமா கொட்டகைகள் படிப்படியாக மூடப்பட்டு வருகின்ற ஒரு நாடு உருவாகி வருகின்றது.

நான் சிறு பராயத்தில் முதல் முதலில் பார்த்த திரைப்படம் தான் "சிங் சிங் நோனா." அதனை எங்களுடைய பிரதேசத்தில் உள்ள தம்புத்தேகம ஈகள் தியேட்டரில் தான் பார்த்தேன் அது எனக்கு ஞாபகமிருக்கிறது. இப்போது அந்த சினிமா தியேட்டர் ஒரு நெற் களஞ்சியமாகும். மாத்தறை புரோட்வே சினிமா தியேட்டர் இப்போது ஒரு சுப்பர் மார்க்கட். ஒரு சில சினிமா மண்டபங்களில் ரியூஷன் வகுப்புகள் நடைபெறுகின்றன. இவை எதை எடுத்துக்காட்டுகின்றன? எமது நாடு எந்த திசையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறது என்பதை அல்லவா? என்றார்.

மிகக் குறைந்த எண்ணிக்கை கொண்ட சினிமா மண்டபங்களே எஞ்சியுள்ளன. ஏனையவை மூடப்பட்டு விட்டன. இப்பொழுது கேஸ் வரிசைகள் கிடையாது, எண்ணெய் வரிசைகள் கிடையாது போன்ற கதைகளை நாங்கள் கேட்கிறோம். ஆனால் நாங்கள் சினிமா கொட்டகைகளில் வரிசைகளைக் காண விரும்புகிறோம். நாடக அரங்கொன்றின் முன்னால் வரிசையைக் காண விரும்புகிறோம். எனவே நாங்கள் எமது ஆட்சியின் கீழ் கலைக்கு உரிய இடம் கொடுத்து உயர்த்தி வைக்க நடவடிக்கை எடுப்போம். நாங்கள் தொடக்கத்திலேயே ஆச்சரியத்தைப் படைத்துவிடமாட்டோம். மீண்டும் மக்களை சினிமா தியேட்டர்களை நோக்கி அழைப்பிக்கின்ற, நாடக அரங்குகளை நோக்கி அழைப்பிக்கின்ற, மீண்டும் இலக்கிய நூல்களை வாசிக்கின்ற இடத்திற்கு அழைப்பிக்கின்ற எமது நாட்டுப் பிரஜையின் இரசனையை முன்னேற்றுவதற்காகக் கட்டம் கட்டமான நடவடிக்கைகளை எமது ஆட்சியின் கீழ் நாங்கள் மேற்கொள்வோம் என்றார்.

# "வேண்டும் ரணில்; மீண்டும் ரணில்"

இப்பிரசார கூட்டங்களில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும், இ.தொ.கா. பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன், இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்க, மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், இ.தொ. கா உபதலைவருமான முத்துசாமி சிவஞானம், மாத்தளை மாநகர சபை முன்னாள் நகராதிபதி சந்தனம் பிரகாஷ், மாத்தளை நகர சபை, பிரதேச சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள், மாவட்ட தலைவர்கள், மாவட்டத் தலைவிமார்கள், தோட்டத் தலைவர், தலைவிமார்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.





# "கிளிநொச்சியிலும் வீணையை இசைக்க முடியும்"

தோழர் டக்ளஸ் தேவானந்தாவின் திட்டமிடலுக்கும் ஓய்வுறக்கம் அற்ற உழைப்பிற்கும் கிடைத்த கௌரவம். ஈ.பி.டி.பி. இன் ஆளுமைகளில் ஒருவராக எதிர்பார்க்கப்பட்டவரே, கிளிநொச்சியில் வீணை ஒலியை இசைக்க முடியாது என்று விட்டோடிய நிலையிலும் நடைபெற்றுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

நம்பிக்கையுடன் கட்சியின் கிளிநொச்சி செயற்பாடுகளைப் பொறுப்பெடுத்து, தோழரின் சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுத்துச் செயற்பட்டு வருகின்ற தோழர் தவநாதன், உள்ளிட்ட கிளிநொச்சி தோழர்களின் உழைப்பிற்குக் கிடைத்த வெற்றியாகும் என்றும் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளித்து, கிளிநொச்சியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்துக்கு பின்னர் ஈ.பி.டி.பி. விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எந்த வரிசையில் நிற்பது

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு எதிர்வரும் 21ஆம் திகதியன்று காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரையிலும் நடைபெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைக்கும் நிறைவடையும் தறுவாயில் உள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கை, புதன்கிழமை(18) நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைகின்றது. அதற்குப் பின்னர் எவரும் பிரசார நடவடிக்கையில் ஈடுபடமுடியாது.

> **கலாசாரம் மற்றும் மதம் காரணமாக, கிழக்கு மாகாணத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் என இரண்டு வரிசைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளது**

இந்நிலையில், வாக்களிப்பு தினத்தன்று வாக்குச்சாவடிகளுக்குச் செல்லும் தாங்கள் எந்தவரிசையில் நிற்பது என சமபால் உறவாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். ஒருசில வாக்குச்சாவடிகளில் ஆண், பெண் இரு பாலாருக்கும் தனித்தனி வரிசைகள் அமைக்கப்படும். சில வாக்குச்சாவடியில் இரு பாலாரும் ஒரே வரிசையில் சென்றே வாக்களிப்பார்கள்.

இந்நிலையில், இரு பாலாரும் செல்லும் வரிசையிலேயே சமபால் உறவாளர்களும் சென்று வாக்களிக்க வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எந்த வரிசையில் சென்று வாக்களிப்பது என சமபால் உறவாளர்களின் சங்கத்தால் தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தை ஆராய்ந்ததன் பின்னரே இந்த தீர்மானத்தை எடுத்ததாக ஆணைக்குழு அறிவித்துள்ளது,

எனினும், கலாசாரம் மற்றும் மதம் காரணமாக, கிழக்கு மாகாணத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் என இரண்டு வரிசைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# “தாவிய குரங்குகளுக்கு தயவுகாட்டக் கூடாது”

உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் சிலர் எங்களை விட்டுச் சென்றாலும் கட்சியின் தலைவர் ரிஷாட் பதியுதீனுடன் உறுதியாகச் செயற்பட்டு, சஜித் பிரேமதாசவின் வெற்றியை உறுதி செய்யவுள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மன்னார் பிரதேச சபை, மன்னார் நகர சபை, முசலி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்கள் தெரிவித்தனர்.

மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாஹிர், முசலி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் எஸ்.எம்.பைரூஸ், இன்னும் சபையின் முன்னாள் உறுப்பினர் வாஹித் மற்றும் மன்னார் நகர சபை முன்னாள் உறுப்பினர் நவ்சீன் உள்ளிட்ட ஏனைய முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்கள் தெரிவித்ததாவது,



“எமது கட்சியின் முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் கட்சி மாறவில்லை. மாறாக குரங்குகள் போல, அங்கும் இங்கும் தாவித்திரிகின்றனர். ரணில் விக்ரமசிங்க தோற்றவுடன் மீண்டும் எம்மிடமே இவர்கள் வருவர். இதற்கு முன்னரும் இவ்வாறு இவர்கள், தாவித்தாவியே திரிந்தனர்.

கட்சித் தலைமை இனியும் இவ்விடயத்தில் தயவு காட்டக்கூடாது.

நாலாம் கட்டை அருவி ஆறு தொடக்கம் மறிச்சுக்கட்டி வரைக்கும், மறிச்சுக்கட்டியிலிருந்து அரிப்பு வரைக்குமான எமது மீள்குடியேற்றத்தில், எமது தலைவர் ரிஷாட் பதியுதீன் கடுமையாக உழைத்தார்.

காடுகளை அழித்து, துப்புரவுப் பணிகளை முன்னெடுத்த காலத்தில் ஏற்பட்ட இடர்களை இல்லாது ஒழித்தவர் எமது தலைவர் ரிஷாட் பதியுதீன். வீடுகளை நிர்மாணித்து, வீதிகளைப் புனரமைத்ததுடன் வாழ்வாதார உதவிகளை வழங்கினார்.

எமது பிராந்திய முன்னேற்றத்துக்கு இந்தத் தலைமையே வேண்டும். எங்களோடு இருந்து எல்லாவற்றையும் அனுபவித்துவிட்டு, எச்சில் ஆசைகளுக்காகச் சிலர் கட்சிக்குத் துரோகம் இழைத்துள்ளனர். இவர்களுக்கு இனிமேலும் மன்னிப்போ அல்லது கருணையோ காட்டக்கூடாதெனக் கோருகிறோம்” என்று தெரிவித்தனர்.

## இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

ரஸீன் ரஸ்மின்

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி கற்பிட்டி வடக்கு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டதாக கூறி, கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 22 இந்திய மீனவர்களில், 10 பேரின் விளக்கமறியலை எதிர்வரும் 18ஆம் திகதி வரை நீடித்து மாவட்ட நீதிவான் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (10) உத்தரவிட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் 22 பேரும் எல்லை தாண்டி புத்தளம் - கற்பிட்டி வடக்கு கடற்பகுதியில் மீன்பிடியில். ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, கடந்த ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இரவு கடற்படையிரால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த இந்திய மீனவர்கள் பயணித்த இரண்டு விசைப் படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்த வருடம் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மூலம் இலங்கையில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 44 இந்திய மீன்பிடி படகுகளைக் கைப்பற்றியுள்ளதுடன், 322 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.



## வெளிநாட்டு பிரஜைகள் இருவர் விபத்தில் காயம்

திஸ்ஸமஹாராம - ரபர்வத்த வீதியில் புதன்கிழமை (11) காலை இடம்பெற்ற விபத்தில் வெளிநாட்டு பிரஜைகள் இருவர் காயமடைந்துள்ளனர். சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கரவண்டி ஒன்று எதிர்த்திசையில் பயணித்த டிப்பர் வாகனம் ஒன்றுடன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. முச்சக்கரவண்டியில் பயணித்த வெளிநாட்டு பிரஜைகள் இருவரே காயமடைந்துள்ளனர்.

## சீதா குமாரிக்கு அமைச்சு பொறுப்பு



சுகாதார, மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக சீதா குமாரி அறம்பேபொல நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இந்த நியமனம் புதன்கிழமை (11) வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினரான சீதா குமாரி அறம்பேபொல சுகாதார இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்து நிலையில் தற்போது சுகாதார, மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.



## நல்லூர் தேருக்கு சென்றவர்களே!

எஸ்.தில்லைநாதன்

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவின்போது, பக்தர்களால் தவறவிடப்பட்ட, இன்னமும் உரிமை கோரப்படாத பொருட்கள் யாழ். மாநகர சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கைச்சங்கிலி - 1, மோதிரம் -1, பணப்பைகள் - 9, கைக்கடிகாரங்கள் - 18, தேசிய அடையாள அட்டைகள் - 4, சாரதி அனுமதிப்பத்திரம் - 4, வங்கி அட்டைகள் - 4, திறப்புகள் - 39 ஆகிய பொருட்களே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டன. இவற்றை உரிமையாளர்கள் உரிய ஆதாரங்களைக் காட்டி மாநகர சபை நிர்வாகக் கிளையில் அலுவலக நேரத்தில் புதன்கிழமை (11) தொடக்கம் ஒக்டோபர் 10ஆம் திகதி வியாழக்கிழமை வரை பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## ஒரு தொகை மஞ்சள் மீட்பு

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - சேரக்குளி கடற்பிரதேசத்தில் இருந்து ஒரு தொகை மஞ்சள் கடற்படையினரால் செவ்வாய்க்கிழமை (10) கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த கடற்பிரதேசத்தில் உள்ள காட்டுப் பகுதியில் கைவிடப்பட்டிருந்த சில உர மூடைகளை கடற்படைப் படையினர் சோதனை செய்துள்ளனர்.

அந்த உர மூடைகளில் உலர்ந்த மஞ்சள் இருந்தமை தெரியவந்துள்ளது.

குறித்த காட்டுப்பகுதியில் இருந்து மீட்கப்பட்ட 14 உர மூடைகளில் இருந்து சுமார் 470 கிலோ கிராம் மஞ்சள் காணப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.



குறித்த மஞ்சள் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் விற்பனை செய்யும் நோக்கில் இவ்வாறு எடுத்து வந்திருக்கலாம் எனவும் கடற்படையின் கெடுபிடிகள் காரணமாக சந்தேக நபர்கள் மஞ்சள் அடங்கிய உரமூடைகளை காட்டுப் பகுதியில் கைவிட்டுச் சென்றிருக்கலாம் எனவும் தாம் சந்தேகிப்பதாகக் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

## டிப்பர் மோதியதில் மாணவி பலி

எம்.றொசாந்த்

டிப்பர் வாகனம் மோதியதில் பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று யாழ்ப்பாணத்தில் செவ்வாய்க்கிழமை (10) இடம்பெற்றுள்ளது.

கொக்குவில் இந்து கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் வினுதா விஜயகுமார் (வயது 17) எனும் மாணவியே உயிரிழந்துள்ளார்.

திருநெல்வேலி பகுதியில் மாணவி துவிசக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்தவேளை, வீதியால் வந்த டிப்பர் வாகனம் மோதியதில் படுகாயமடைந்த மாணவியை அங்கிருந்தவர்கள் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

வைத்தியசாலையில் மாணவி ஏற்கெனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சஜித்தின் பரப்புரை கூட்டம் இரத்தானது

எஸ்.தில்லைநாதன்

மக்களின் வருகையின்மையால் சுமந்திரன் எம்.பியின் சொந்தத் தொகுதியான வடமராட்சி உடுப்பிட்டியில் செவ்வாய்க்கிழமை (10) நடைபெறவிருந்த சஜித்தின் பிரசாரக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து உடுப்பிட்டி தொகுதியில் கரணவாய் கொலின்ஸ் மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

செவ்வாய்க்கிழமை (10) முற்பகல் 10 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெறவிருந்த நிலையில், இசைக் குழுவினர் மட்டும் நிகழ்ச்சியை நடத்தியிருந்தனர். ஓரிருவர் தவிர வேறெவரும் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. இதையடுத்து, அந்தக்கூட்டம் இரத்து செய்யப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சி, சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவை அறிவித்த பின்னரும்கூட, சஜித்தின் பிரசாரக் கூட்டத்தில் மக்கள் பங்கேற்கவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை, வடமராட்சி அல்வாய் மாலைசந்தை மைக்கல் விளையாட்டு மைதானத்தில் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து செவ்வாய்க்கிழமை(10) நடந்த கூட்டத்தில் பெருமளவிலானோர் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# விஞ்ஞாபனங்களில போதைப்பொருள் எதிர்ப்பு முன்மொழிவுகள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான விஞ்ஞாபனங்களில், மதுபானம், புகைப்பொருள் மற்றும் ஏனைய போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்துவதற்காக விஞ்ஞான ரீதியான அடிப்படையில் 12 பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலைய புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் தினமும் 45,000 பேர் ஹெரோயின் பயன்படுத்துகின்றனர். மேலும், ஆறு இலட்சம் பேர் கஞ்சா புகைக்கிறார்கள். இலங்கையின் சனத்தொகையில் 21 சதவீதமானோர் மதுபானம் அல்லது மதுபானம் பாவிக்கின்றனர்.

மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட மதுவை ஒரு தீர்வாக அடையாளம் காணலாம். சில சுய ஏமாற்றிகள் சைவ பானம் என்று கூறி மது அருந்துகின்றனர். இது முற்றிலும் உண்மை. மாட்டிறைச்சி அல்லது மீனில் இருந்து மது வடிக்கப்படுவதில்லை. தானியங்கள் அல்லது பழங்களிலிருந்து பிரத்தியேகமாக வடித்தல் செய்யப்படுகிறது.

மது தேசத்தின் கேடு. மது வரி என்பது தேசிய வருமானத்தில் பெரும் பகுதி. எனவே, ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலிலும், ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் மதுக் கட்டுப்பாடு தொடர்பான அரசியல் கொள்கைகள் விவாதிக்கப்படுகின்றன.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் முப்பத்தொன்பது வேட்பாளர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர். அதில் ஒருவர் மரணித்துவிட்டார். ஏனைய 38 பேரில், ரணில், சஜித், அனுர, நாமல் மற்றும் திலித் ஜயவீர ஆகியோர் போதைப்பொருள் எதிர்ப்பு முன்மொழிவுகளை அதிகளவில் முன்வைத்துள்ளார்.

போதைப்பொருள் விவகாரத்தில் இரண்டு பக்கங்கள் உள்ளன. இந்நாட்டு மக்கள் மது, கஞ்சா, சிகரெட், சுருட்டு, பீடி போன்றவற்றுக்கு அடிமையாகி காலம் காலமாக இருந்து வருகின்றனர்.

காலனித்துவ காலத்தில் கஞ்சா சுருட்டு மிகவும் பிரபலமான பொருளாக இருந்தது. பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் தான் இந்நாட்டு மக்களுக்குச் சீல் சாராயத்தை அறிமுகப்படுத்தினார்கள். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் அன்றாடக் கூலியிலிருந்து பணத்தைக் கழிப்பதற்காக வண்டியில் மது போத்தல்களை வைத்து தோட்டங்களுக்கு எடுத்துச் சென்று விற்று வந்தனர். மதுவின் விலை அதிகமாக இருந்ததால், தோட்ட மக்கள் மதுபானம் மற்றும் சுண்ணாம்பு புளிப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி மதுபானம் தயாரித்தனர்.

ஆல்கஹால் மிகவும் நச்சுத்தன்மை வாய்ந்தது. இந்த பானத்தை வாடிக்கையாளர் தவறுதலாகக் குடித்தால், அவர் இரத்த வாந்தி எடுத்து உயிரிழந்தார். ஆரோக்கியத்திற்குத் தீங்கு விளைவிக்கும். மதுவின் ஊடாக ஈட்டும் வரிப்பணத்தை விட, மது சிராய்ப்பு நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்காக அதிகமான பணத்தைச் செலவிடுகின்றது.

மதுவும், போதைப்பொருள் மிகவும் தீங்கு விளைவிப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் யார் ஆட்சிக்கு வந்தாலும் போதைப்பொருள் வியாபாரத்தை ஒழிக்க வேண்டும். அதை அடுத்த ஜனாதிபதியும் நினைவில் கொள்ள வேண்டும்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள், மதுவுக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்டெடுத்து சாதாரண வாழ்க்கை முறைமைக்குள் கொண்டுவருவது என்பது குதிரைக் கொம்பாகும். எனினும், நாட்டினதும், எதிர்கால குழந்தைகளினதும் நலனைக் கவனத்தில் கொண்டு, அதிரடியான நடவடிக்கையை எடுக்கவேண்டும். வாக்களிப்பதற்கு மக்கள் இருந்தால் மட்டுமே பிரதிநிதித்துவம் தேவைப்படும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

மனிதர்கள் தாங்கள் செய்த புண்ணியங்கள், பாவங்கள் என்பவற்றைக் கணக்கிட்டுச் சொல்லமுடியாது. அவற்றை முழுமையாகச் சொல்லவும் மாட்டார்கள். சின்னதாக செய்த நல்லதை மட்டும் சொல்பவர்கள், பாவங்கள் எதையும் செய்ததே இல்லை என்று கூறிவிடுவார்கள்.

மனசாட்சி அவர்களுக்கு விளக்கமாகச் சொல்லிக் கொண்டே இருக்கும். எந்த உயிரையும் இம்சிப்பது, வதைப்பது மகா பாவம். உயிர்கள் அனைத்துமே உலகுக்கு உரியன. மனிதர்களுக்கு ஆணவம், அகந்தை அகல்வது இல்லை.

பொய்களைச் சொல்பவர்களால், மெய்களைச் சொல்லத் தயக்கம் காட்டுகிறார்கள். வாய்மை உள்ளவர்களை வையகம் ஏன் போற்றுகின்றது? இதை நாம் உணரவேண்டும்.

இரக்கம், அன்பு ஓங்கினால், பாவங்கள் என்பதே உலகில் நடக்காது. தற்செயலாகத் தவறுகளைச் செய்வதைவிட, வேண்டுமென்றே தொடர்ந்தும் தவறுகளைச் செய்பவர்கள் ஏராளம்.

நிம்மதியான வாழ்க்கையை அமைக்க, நீதி நெறியுடன் கூடிய வாழ்க்கையை வாழ்ந்தேயாகவேண்டும்.

எவரையும் வருத்துவதால், எமது நிம்மதி பறிக்கப்படுகின்றது. தற்காலிகமாகச் சந்தோசப்படும் கயவர்கள், துன்பப்பட்டே தீருவர்.

நன்றி -பருத்தியூர் பாலா.வயிரவநாதன்

# ‘ஜெயிக்கப் போவது யார்?

முருகானந்தம் தவம்

நாட்டில் 9ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், “ஜெயிக்கப் போவது யார்” என்பது தொடர்பில் இடையிடையே பல்வேறு கருத்துக் கணிப்புக்கள் வெளிவந்து கொண்டிருந்தாலும், அவை கட்சி அல்லது ஜனாதிபதி வேட்பாளர் ஆதரவு சார்ந்த கருத்துக் கணிப்புகளாகவே உள்ளதை அவதானிக்க முடிகின்றது. சில கருத்துக்கணிப்புகள் ஜனாதிபதி வேட்பாளர்களின் வெற்றி வாய்ப்பு தொடர்பில் முன்னுக்குப் பின் முரணான முடிவுகளைக் கொண்டதாகவே காணப்படுகின்றன.

அதுமட்டுமின்றி, இந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களும் அவர்களின் கட்சிகளும், ஆதரவுக் கட்சிகளும் பிரசார மேடைகளிலும் ஊடக மாநாடுகளிலும் தமது வேட்பாளரின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்து மேற்கொண்டு வரும், பிரசாரங்களும் வெளியிட்டுவரும் தகவல்களும் வெற்றி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றன. எனவே, நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் களம் தொடர்பிலும் வெற்றி வாய்ப்புகள் குறித்தும் சற்று ஆராய்வோம்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட 39 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்திய நிலையில், ஒருவர் மரணமடைந்து விட்டதனால், 38 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் தற்போதைய ஜனாதிபதியும் வேட்பாளருமான ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவரும் வேட்பாளருமான சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தி, ஜே.வி.பி. ஆகியவற்றின் தலைவரும் வேட்பாளருமான அனுரகுமார திசாநாயக்க, பொதுஜன பெரமுன வேட்பாளருமான நாமல் ராஜபக்ஷ ஆகியோரிடையிலேயே பிரதான போட்டி இடம்பெறும் நிலையில், தமிழ் பொது வேட்பாளரான அரியநேத்திரனும் இவர்களின் வெற்றி வாய்ப்பில் தாக்கம் செலுத்தக் கூடியதொரு வேட்பாளராகவே உள்ளார்.

இந்த 38 வேட்பாளர்களுக்கும் வாக்களிக்க இம்முறை 25 தேர்தல் மாவட்டங்களிலிருந்து 1 கோடியே 71 இலட்சத்து 40,354 பேர் தகுதி பெற்றுள்ளனர். தற்போது பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் பெரும் பிரயத்தனங்களில் ஈடுபட்டும் மக்களைக் கவரும் வாக்குறுதிகளை வழங்கியும் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் மக்களுக்கான உத்தரவாதங்களை வழங்கியும் கிராமம், கிராமமாக மக்களின் காலடிக்குச் சென்று வாக்கு வேட்டை நடத்தி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில், தான் இவர்களில் ரணில் தான் மீண்டும் ஜனாதிபதியாவார், இல்லை சஜித் தான் ஜனாதிபதியாவார். இல்லை, இல்லை... இந்த முறை ஜே.வி.பி. அலை அடிப்பதனால் அனுரகுமார தான் ஜனாதிபதி, யார் எதைக் கூறினாலும் ராஜபக்ஷகளுக்கென ஒரு வாக்கு வங்கி உள்ளது. அவர்கள் தமது வெற்றிக்காக எதனையும் செய்யத் துணிந்தவர்கள். எனவே, நாமல் தான் அடுத்த ஜனாதிபதி என்றவாறாக பல்வேறுபட்ட கருத்துக்கள் மக்கள் மத்தியில் உள்ளன. ஆனால், உண்மை நிலைவரம் என்ன?

இந்த ரணில், சஜித், அனுரகுமார, நாமல் ஆகிய 4 வேட்பாளர்களில் 4ஆவது வேட்பாளரான நாமல் போட்டியில் இல்லை என்பதே உண்மை. அதேநேரம், ஏனைய 3 வேட்பாளர்களில் ரணிலுக்கும் சஜித்துக்கும் இடையில்தான் கடுமையான போட்டி உள்ளது. இவர்களில் ஒருவரே அடுத்த ஜனாதிபதியாக வெற்றி பெறும் கள சூழலே உள்ளது. அனுரகுமார திசநாயக்கவுக்கு தென்பகுதியில் அலை அடித்தாலும், வேட்பாளர்களின் வெற்றியைத் தீர்மானிக்கும் வாக்காளர்களான தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் வாக்குகளை அனுரகுமார திசாநாயக்க பெறுவதென்பது குதிரைக் கொம்பாக உள்ளது. இதற்கு கடந்த சில ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளில் மீள் பார்வை செலுத்த வேண்டியது அவசியம் .

கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிட்ட நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ, சஜித் பிரேமதாச, அனுரகுமார திசாநாயக்க ஆகிய 3 வேட்பாளர்களே பிரதான போட்டியாளர்களாக இருந்தனர். 1 கோடியே 59 இலட்சத்து 92,096 வாக்காளர்களில் 1 கோடியே 33 இலட்சத்து 87,951 பேர் வாக்களித்த அந்த தேர்தல் முடிவுகளின்படி, கோட்டாபய ராஜபக்ஷ 69 இலட்சத்து 24,255 வாக்குகளைப்பெற்று ஜனாதிபதியாகத் தெரிவானார். சஜித் பிரேமதாச 55 இலட்சத்து 64,239 வாக்குகளையும் அனுரகுமார திசாநாயக்க 4 இலட்சத்து 18,553 வாக்களையுமே பெற்றிருந்தனர்.

தற்போது நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் 1 கோடியே 71 இலட்சத்து 40,354 பேர் வாக்களிக்க உள்ள நிலையில், ஒரு வேட்பாளர் ஜனாதிபதியாக வெற்றி பெற வேண்டுமானால், 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற வேண்டும். அதாவது 1 கோடியே 71 லட்சத்து 40,354 வாக்காளர்களில் 1 கோடியே 50 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிப்பார்களேயானால் அதில், 75 இலட்சம் வாக்குகளையாவது பெற வேண்டும். ஆனால், இந்த முறை எந்த வேட்பாளரும் இவ்வளவு தொகை வாக்குகளைப் பெற முடியாத நிலை இருப்பதனாலேயே விருப்பு வாக்குகளைப் பெறுவது தொடர்பில் ஜனாதிபதி வேட்பாளர்கள் தீவிர கவனம் செலுத்துகின்றனர்.

2005 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ 48 இலட்சத்து 87,152 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்ற நிலையில், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ரணில் விக்ரமசிங்க 47 இலட்சத்து 6,366 வாக்குகளைப் பெற்று 1 இலட்சத்து 86,786 வாக்குகளினால் தோல்வியடைந்தார். அந்த தேர்தலை விடுதலைப் புலிகளின் வேண்டுகோளை ஏற்று வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்கள் புறக்கணித்திருந்தமையே வடக்கு, கிழக்கில் பெரும் வாக்கு வங்கியை வைத்திருந்த ரணில் விக்ரமசிங்க தோல்வியடைய முக்கிய காரணமானது. அவ்வாறிருந்தும், ரணில் விக்ரமசிங்க வடக்கில் 92,344 வாக்குகளையும் மூவினங்களும் வாழும் கிழக்கில் 5 இலட்சத்து 88,438 வாக்குகளையும் பெற்றிருந்தார்.

2010 மற்றும் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் ரணில் விக்ரமசிங்கவோ சஜித் பிரேமதாசவோ அனுரகுமாரவோ போட்டியிடாத நிலையில், 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவை எதிர்த்து சஜித் பிரேமதாசவும் அனுரகுமாரவும் போட்டியிட்டனர். இதில் கோட்டாபய ராஜபக்ஷ 69 இலட்சத்து 24,255 வாக்குகளைப்பெற்று ஜனாதிபதியானார். சஜித் பிரேமதாச 55 இலட்சத்து 64,239 வாக்குகளையும் அனுரகுமார திசாநாயக்க 4 இலட்சத்து 18,553 வாக்குகளையே பெற்றிருந்தனர். இதில் சஜித் பிரேமதாச வடக்கில் 4 இலட்சத்து 87,461 வாக்குகளைப் பெற்ற நிலையில், அனுரகுமார 2,531 வாக்குகளையும் கிழக்கில் சஜித் பிரேமதாச 6 இலட்சத்து 65,163 வாக்குகளைப் பெற்ற நிலையில், அனுரகுமார 13,494 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார்.

ஆக, 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 15 இலட்சத்து 31,892 வாக்காளர்கள் வாக்களித்த நிலையில், சஜித் பிரேமதாச 11 இலட்சத்து 52,624 வாக்குகளைப் பெற்ற நிலையில், அனுரகுமார 16,025 வாக்குகளை மட்டுமே பெற்றிருந்தார். 2005 மற்றும் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைக் கவனித்தால் வடக்கு, கிழக்கில் ரணில், சஜித் ஆதரவு நிலையே உள்ளது. இவ்வாறான நிலையில், நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வடக்கில் 8 இலட்சத்து 99,268 வாக்காளர்களும், கிழக்கில் 13 இலட்சத்து 21,043 வாக்காளர்களுமாக 22 இலட்சத்து 20,311 வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர். இந்த வாக்குகளில் அதிகமானவற்றை ரணில், சஜித் ஆகியோர் பங்கிட உள்ள நிலையில், தமிழ் பொது வேட்பாளருக்கும் கணிசமானளவு ஆதரவு உள்ளதால் வடக்கு, கிழக்கில் அனுரகுமாரவின் நிலை கவலைக்கிடமாகவே உள்ளது.

## கடிதங்கள்

### குப்பைகளை அகற்றுங்கள்

ஹட்டன் நகர சபை ஊழியரினால் சூழல் மாசடைந்து வருவதாகக் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹட்டன் நகரில் நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாக நகர சபை ஊழியர்களினால் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பொலித்தீன் குப்பைக்குக் குடியிருப்பு பகுதிகளில் தீ வைப்பதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த நகரில் பல பகுதிகளிலும் பாரிய அளவில் பொலித்தீன் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் குப்பைகள் குவிந்து கிடக்கின்றன

மேலும், நகர சபை முன் காணப்படுகின்ற குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குப்பைகளை தீ வைப்பதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

- செ.தி.பெருமாள்





# வேறு ஒன்றும் வேண்டாம்

ச.பிரியதர்சன் குரூஸ்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



“வீதி வேண்டும் என்றால் நாங்கள் வீதியில்தான் இறங்கி போராட வேண்டும்” என்ற மக்களின் நிறைவேறாத மன ஏக்கங்கள் இன்றும் நாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. நாட்டில் பல ஆட்சி மாற்றங்கள் நடைபெற்று வருகின்ற போதும் மக்களின் பிரச்சினைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி அவற்றிற்கான தீர்வினை முன்கொண்டு வருவதில் பல ஆட்சியாளர்கள் அசட்டையாகவே இருந்து வருகின்றனர். அவ்வாறு அவர்கள் சில விடயங்களை கண்டும் காணாதது போல் இருக்கும் நீண்டகால பிரச்சினைகளில் இதுவும் ஒன்று.

இலங்கையின் வடமாகாணத்தின் மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச சபைக்குட்பட்ட ஓர் கரையோரப்பகுதியே முத்தரிப்புத்துறை கிராமம்.

பல தொல்லியல்சார் வரலாற்று அம்சங்களையும், மக்களின் ஜீவனோபாயத் தொழிலாக கடற்றொழிலை முதன்மைப்படுத்துவதோடு, விவசாயத்தை நம்பியும் சிலர் தங்கள் வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்றனர். இந்நிலையில், இக்கிராமத்தில்

700க்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில், முத்தரிப்புத்துறை கிராமத்தின் மேற்கு கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள 14ஆம் வட்டாரம் என அழைக்கப்படும் குடியிருப்பானது கிட்டத்தட்ட 2018ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் அரசாங்கத்தால் குடியமர்த்தப்பட்ட பல இளம் குடும்பத்தினர்கள் நடந்து செல்லக் கூட ஓர் ஒழுங்கான வீதியின்றி இருப்பதோடு குறிப்பாக மழைக் காலங்களில் பெரும் அவலங்களை இவர்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், சிறு குடித்தொகைகளை கொண்ட பல கிராமங்களுக்கு கூட வீதி, மின்சாரம், குடிநீர் என அனைத்து வசதிகளும் கிடைத்த போதும், அதிகளவான சனத்தொகைகளை கொண்ட இக்கிராமத்தில் 5 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகின்ற இந்த மக்களுக்கு வீதியானது இன்னமும் யாராலும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே காணப்படுகிறது. எனவே, இந்த மக்கள் யாராலும் கவனிக்கப்படாமல் இருப்பது ஏன்? இவர்கள் வாழும் பகுதியில் அவர்களின் பிரதான பிரச்சினைக்கான தீர்வு ஏன் இன்னும் எட்டப்படவில்லை? என அங்கு வாழ்கின்ற மக்களிடம் வினவிய போது, ஒவ்வொருவரின் பதில்களும் பின்வருமாறு அமைந்தது.

அதன்படி, அக்கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயும், ஓர் ஆசிரியராகவும் பாடசாலையில் கடமையாற்றி வருகின்ற பிறீடா டபரேரா என்பவரிடம் இது பற்றிக் கேட்டறிந்தபோது, பின்வருமாறு கூறினார். “இந்த இடத்திற்கு நாங்கள் குடியேறி ஐந்து வருடங்கள் ஆகிவிட்டது. ஆனால், நாங்கள் நடந்து செல்வதற்குக் கூட ஒரு வீதியில்லாமல் பெருமளவில் சிரமப்படுகின்றோம். எனக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். அவர்கள் இருவரையும் மழைக் காலங்களில் எனது இடுப்பில் வைத்தே தூக்கிச் செல்வேன். தூக்கிச் செல்கின்ற போது, சில நேரங்களில் சேற்றிற்குள் புதைந்து நடக்க முடியாத சூழ்நிலையும், சில சமயங்களில் நானும் எனது பிள்ளைகளும் சேற்றில் வழுக்கி விழக்கூடிய நிலைகள் கூட ஏற்படுகின்றன. எனது கணவர் கூலிக்கு ஆட்டோ ஓடுகின்றவர். எங்களுக்கு வீதி இல்லை என்பதனால் அவர் ஆட்டோவை வீட்டு வளவுக்குள் கொண்டுவர முடிவதில்லை. இதனால் ஒரு சமயம் எங்களுடைய ஆட்டோவை நாங்கள் வெளியே விட்ட போது களவு போய்விட்டது” என்று மனவருத்தத்துடன் கூறினார்.

அதனைத் தொடர்ந்து, இக்குடியிருப்பில் நான்கு வருடங்களாக வசித்துவரும் பிரசன்னா குரூஸ் என்ற நபரை வினவியபோது, மழைக் காலங்களில் சிறு பிள்ளைகளைப் பாலர் பாடசாலைக்குக் கூட



தோளில் ஏற்றிக்கொண்டுதான் சுமக்கின்றோம். மேலும் குடிநீர் பவுசர் உள்ளே வர முடியாத சூழ்நிலை காணப்படுவதனால் குடிநீரைத் தோளில் சுமந்து கொண்டுதான் வெகுதூரம் நடந்து வருவோம்.

மேலும், இந்த குடியிருப்பில் வசித்து வரும் சுபத்திரா என்ற குடும்பப் பெண் கூறியதாவது, “மழை வந்தால் வெளியே கால் வைக்கவே முடியாது. எங்கேயும் செல்ல முடியாது. நான் ஒரு ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். காலையில் 6:30 மணிக்கு நடந்து சென்றால்தான் பிரதான வீதியால் வருகின்ற பேருந்தை என்னால் பிடிக்க முடியும். இந்த மாதிரியான நிலைமைகளால் வீதியால் பயணிக்கும் போது, பேருந்தைக்கூட தவறவிட்டு பாடசாலையில் *Red line* அடிக்கப்படுகின்ற சூழ்நிலைக்கும் தள்ளப்பட்டிருக்கின்றேன்”

அத்துடன், எங்களுடைய துன்ப நிலை உங்களுக்கு தெரியும், நாங்கள் உங்களிடமிருந்து பெரிதாக ஒன்றையும் எதிர்பார்க்கவில்லை, நல்ல வீதி மட்டும் போட்டு தாருங்கள், செருப்பு போட்டு கூட நடக்க இயலாது, ஒரு கால் வைத்து விட்டு அடுத்த காலை தூக்கி வைக்க முடியாது. இதில் நடந்து போவதே எமக்கு பெரும் துயராகவே உள்ளது” என்றார்.

இது தொடர்பில் இவ்வட்டாரத்தின் விளையாட்டு பயிற்றுவிப்பாளரான மெலிசன் பீரிஸ் என்பவரை வினவிய போது, “கிட்டத்தட்ட 5 வருடங்களுக்கு முன்னர் 70 வீட்டுத் திட்டங்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டன. ஆனால், வீட்டைக் கட்டித் தந்தவர்கள் அங்கு வந்து செல்வதற்கு ஏற்ற பாதை வசதிகளை யாருமே செய்து தரவில்லை. இந்த சீரற்ற வீதியால் மழைக்காலங்களில் நாங்கள் பெரிதும் சிரமப்படுகின்றோம். இந்த வீதிகளால் நடக்கின்ற போது பாதுகாப்பு பாதணிகளை அணிந்துதான் நாங்கள் அதிகமாக நடந்து வருகின்றோம்” என்று கூறினார்.

மேலும், இப்பகுதியில் வசித்து வரும் அஜித் என்ற நபரை சந்தித்தபோது, “எங்களுக்குக் குடிநீர் வருவதற்குக் கூட ஓர் பாதை இல்லை. யாரும் எங்களைக் கவனிக்கின்றார்கள் இல்லை. இவர்கள் இந்த வீதியை மட்டுமே புனரமைத்து தருவார்களாக இருந்தால் எமக்கு மிகுந்த உதவியாய் இருக்கும்” என்ற கருத்தை அவர் கூறினார்.



# அரங்கை அசத்திய அரங்கேற்றம்

கலைச்செல்வி





*Watersmeet Theatre, Rickmansworth, UK* இல் துர்க்கா குமணனின் வீணை அரங்கேற்றம் மிகவும் விமரிசையாக 2024ஆம் ஆண்டு ஆவணி 24ஆம் திகதியன்று, அரங்கேறியது. அன்று மிகப் பிரபலமான கலைஞர்கள் உட்பட பலவிதமான ரசிகர்கள் துர்க்கா குமணனையும், குருவாகிய சங்கீத ஆச்சாரிய, சங்கீத வித்துவான் சிவதாரணி சகாதேவனையும், அரங்கேற்றத்தின் நுணுக்கங்களையும் மெச்சிப் புகழ்ந்து வாழ்த்தினார்கள்.

துர்க்காவின் அரங்கேற்றத்தின் முதல் பகுதியை அவர் தன்னம்பிக்கையுடன், மிகவும் ரசித்து எந்த விதமான பதட்டமும் இல்லாமல் சிறப்பாக ஆரம்பித்தார்.

அவர் வீணையில் மீட்டிய அத்தனை உருப்படிகளையும் ஒரு முதிர்ச்சி பெற்றவொரு கலைஞரின் நிதானத்துடன் வாசித்த விதம் எல்லோரையும் கவர்ந்தது.

ராமநாதபுரம் ஸ்ரீநிவாச ஐயங்கார் இசையமைத்த கானடா ராகத்தில், கண்ட ஜாதி அட தாளத்தில் அமைந்த பாரம்பரிய வர்ணமான ‘நேர நம்மிதி’யுடன் கச்சேரி ஆரம்பமானது.

இதனைத் தொடர்ந்து, பேகடா ராகத்தில், ரூபக தாளத்தில் ‘வல்லப நாயக்க’, என்ற முத்துசுவாமி தீட்சிதரின் கிருதியை மிகவும் அருமையாகப் பிள்ளையாருக்குச் சமர்ப்பித்தார்.

இவரின் அரங்கேற்றத்தின் மகுடமாகச் சொல்லப்படக்கூடிய ‘இன்னமும் சந்தேகப் படலாமோ’ என்ற கோபாலகிருஷ்ண பாரதியார் இயற்றிய கீரவாணி ராகத்தில் அமைந்த கீர்த்தனத்தின் ராக ஆலாபனையை மிகவும் விஸ்தாரமாகவும் வாசித்ததுடன், பாட்டின் பாவம் குறையாமலும் சாகித்தியம் விளங்கும் விதமாகவும் கையாண்ட விதம் கலைஞர்களின் பாராட்டைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து வந்த கல்பனா ஸ்வரம் மிக நேர்த்தியாகவும் பக்கவாத்தியத்திற்குச் சவாலாக ஆவர்த்தனக் குறைப்புடன் அருமையாக வாசித்து அவரின் குருவுக்கும் பெருமை சேர்த்து தனது உயர்வான இசைத் திறனை வெளிப்படுத்தினார்.

அடுத்ததாக ராகம் தானம் பல்லவி. துர்க்காவின் குருவான சங்கீத வித்துவான் ஸ்ரீமதி சிவதாராணி சகாதேவன் அவர்கள் இயற்றிய மோகனம், கல்யாண வசந்தம் ஆகிய இரண்டு ராகங்களையும், ராக பாவம் கலையாமல் விஸ்தாரமாக வாசித்து, இரண்டு ராகத்திலும் தானம் வாசித்த விதமும், அதனைத்தொடர்ந்து வந்த பல்லவியில் நிரவல் வாசித்து, திரிக்காலப்படுத்தி இரண்டு ராகத்திலும் மிஸ்ர குறைப்புடன்







கூடிய தீர்மானத்துடன் மிகவும் துல்லியமாக வீணை வாசித்து சபையோரை மகிழ்வித்தார். இதனையடுத்து, வந்தது தனி ஆவர்த்தனம். இசை வல்லுநர்களான டாக்டர் அபிராம் சகாதேவன் (மிருதங்கம்), ஸ்ரீபிரகாஷ் (கஞ்சிரா) ஸ்ரீபிரதீப் (கடம்) அவர்கள் தமது இசை வித்துவத்தையும் தனித்துவத்தையும் துல்லியமாக வெளிப்படுத்தினர்.

கச்சேரியின் இரண்டாம் பகுதியில், துர்க்கா தனது அரங்கேற்றம் கண்ட மூத்த சகோதரிகளான டாக்டர் தீபிகா குமணன் மற்றும் சுபிக்கா குமணன் ஆகிய சகோதரிகளோடு ஒருங்கிணைந்து வெளிப்படுத்திய வீணை இசைத் திறமை கண்கொள்ளாக் காட்சி. இச்சகோதரிகள் இரண்டாம் பகுதியை ஒரு தனித்துவமானதும் ஈர்க்கக்கூடியதுமான இசை நிகழ்ச்சியாக மாற்றியது, ஒரு அற்புதமான இசை அனுபவத்தை உருவாக்கியது. சுப்பிரமணிய பாரதியாரதியாரின் ராகமாலிகா, “சின்னஞ்சிறு கிளியே” யை சகோதரிகள் இணைந்து ராகப் பாவத்தோடு சிறப்பாக வழங்கி பார்வையாளர்களை வசீகரித்தார்கள். இறுதிப் பாடலானது ஸ்ரீ வீணை சேஷண்ணாவின் செஞ்சுருட்டி ராகத்திலும் ஆதி தாளத்திலும் அமைந்த விறுவிறுப்பான தில்லானா பாடலாகும்.

**“துர்க்காவின் வீணை இசை பரந்த அளவிலான தாளங்கள் மற்றும் ராகங்களை உள்ளடக்கி, உயிரோட்டத்துடன் இசை அறிஞர்களையும் ரசிகர்களையும் மெய்மறக்கச் செய்தமை அவர்களின் கூற்றிலேயே வெளிப்பட்டது**

மூன்று சகோதரிகளும் இசைத்த இந்த தில்லானா உண்மையிலேயே பார்வையாளர்களின் இதயங்களைக் கவர்ந்தது ஒட்டுமொத்தமாக, வித்வானின் உன்னிப்பான கண்காணிப்பின் கீழ் துர்க்காவின் வீணை இசை பரந்த அளவிலான தாளங்கள் மற்றும் ராகங்களை உள்ளடக்கி, உயிரோட்டத்துடன், இசை அறிஞர்களையும் ரசிகர்களையும் மெய்மறக்கச் செய்தமை அவர்களின் கூற்றிலேயே வெளிப்பட்டது. இந்த இளம் வயதில் அவரின் இசை அறிவும் தான லய சுத்தமும் வியக்கத்தக்கதாக உள்ளது.




மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின்

# 103ஆவது நினைவு தினம்









■ க.அகரன்

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 103ஆவது நினைவு தினம் வவுனியா குருமன்காடு சந்தியில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலை அடியில் புதன்கிழமை (11) இடம்பெற்றது.

இதன்போது, அவரது திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

அத்துடன், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தொடர்பான நினைவு பேருரைகளை து.டன்சிகா, பி.அனிஸ்ரன், றொ.றக்ஸன் மற்றும் தமிழ்மணி அகளங்கனாலும் ஆற்றப்பட்டது.

வவுனியா நகரசபை மற்றும் தமிழ் விருட்சத்தின் ஏற்பாட்டில் சிறீசங்கரின் அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில், செட்டிகுளம் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ஜெகதீஸ்வரன், நகரசபை முன்னாள் உறுப்பினர் சேனாதிராஜா, நகரசபை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் புஷ்பாகரன், தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணன், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத் தலைவர் ரவீந்திரன், பொது அமைப்பினர், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.




# கிழக்கு மாகாணம் முதலிடம்

■ வி.ரி.சகாதேவராஜா



அகில இலங்கை முஸ்லிம் கலாசார போட்டியில் கிழக்கு மாகாணம் முதலாம் இடத்தை பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

இத்தேசிய மட்ட போட்டிகள் கொழும்பு சாஹிரா கல்லூரியில், கடந்த சனிக்கிழமை (07) ஞாயிற்றுக்கிழமை (08) நடைபெற்றது.

கல்வியமைச்சின் சுற்றறிக்கையின் அடிப்படையில் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்தி கிளையின் கல்விப் பணிப்பாளர் மேஜர் என்.ரீ.நசுமுதீனின் வழிகாட்டலில் தேசிய மட்ட போட்டிகள் நடைபெற்றன.

முஸ்லிம் சமய கலாசார அழகியல் பெறுமானங்களின் ஊடாக மாணவர்களின் ஆளுமை பண்புகளை விருத்தி செய்து அதனூடாக தேசிய மற்றும் சர்வதேச தொடர்புகளை மேம்படுத்தி நற்பிரஜைகள் உருவாக்குவதற்குப் பங்களிப்பு செய்தல் எனும் பிரதான நோக்கத்தில் இப்போட்டி நடைபெற்றன.

தேசிய மட்டத்தில் நடைபெற்ற 28 நிகழ்ச்சியில் கிழக்கு மாகாணம் 16 முதலாம் இடத்தையும் மூன்று இரண்டாம் இடத்தையும் நான்கு மூன்றாம் இடத்தையும் பெற்று அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தை பெற்று வரலாற்று சாதனையை பதிவு செய்தது.

கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் தலைமையில் மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஷஹீட் வழிகாட்டலில் இச்சாதனை நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இச்சாதனைக்கு வழிவகுத்த அனைவரையும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் பாராட்டியுள்ளார்.

இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வித் திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் இஸ்லாம் பாடத்திற்கு பொறுப்பான உதவி கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் மாணவர்களுக்கு வாழ்த்துக்களையும் கிழக்கு மாகாண இஸ்லாம் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஷஹீட் நன்றி தெரிவித்தார்.



# விழிப்புணர்வு

■ எஸ்.தில்லைநாதன்



உலக தற்கொலை தடுப்பு தினமான செப்டெம்பர் 10ஆம் திகதி, சுமித்ரயோ அமைப்பின் யாழ். மாவட்ட கிளையால் ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையில் விழிப்புணர்வு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.





# பொன்.சிவபாலனின் 26ஆவது நினைவு தினம்

■ புகஜிந்தன்

யாழ். மாநகர முன்னாள் முதல்வரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறை செயலாளருமான அமரர் பொன்.சிவபாலனின் 26ஆவது வருட நினைவு புதன்கிழமை(11) அன்னாரது சித்தங்கேணி இல்லத்தில் நடைபெற்றது. குடும்ப உறுப்பினர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவேந்தலின்போது, திருவுருவப்படத்திற்கு ஈகைச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் குடும்ப உறுப்பினர்களும் யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் த.முகுந்தன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

1998ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி யாழ். மாநகரசபையில் மாநகர போக்குவரத்து சம்பந்தமான உயரதிகாரி களுடனான கலந்துரையாடலின் போது, கூரை மேல் வைக்கப்பட்ட கிளைமோர் தாக்குதலில் பொன்.சிவபாலன் கொல்லப்பட்டார்.

அவருடன், யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுசந்த மெண்டிஸ், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரா பெர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரமோகன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரத் பெர்னாண்டோ, யாழ். தலைமையக பொலிஸ் அதிகாரி மோகனதாஸ், யாழ். நகர பிரிகேட் மேஜர் கேப்டன் ராமநாயக்க, பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெராட், யாழ். மாநகர சபை உதவி ஆணையாளர் பத்மநாதன், வேலை பகுதி பொறியியலாளர் ஈஸ்வரன், கட்டிட வரைபட கலைஞர் மல்லிகா இராஜரட்ணம், தட்டெழுத்தாளர் பத்மராஜா ஆகியோர் அடங்கிய பன்னிரண்டு பேர் தாக்குதலில் கொல்லப்பட்டனர்.



# நிதி உதவி...

■ பி.கேதீஸ்



டென்மார்க் நாட்டைச் சேர்ந்த அருள்மிகு ஸ்ரீ அபிராமி உபாசகி அன்னையின் நிதி உதவியில் நுவரெலியா பிரதேச சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.தியாகு ஊடாக தலவாக்கலை கிரேட்வெஸ்டன் பாடசாலையில் உடைந்த நிலையில், காணப்படும் தளபாடங்களில் 100 மேசை நாற்காலிகள் திருத்தம் செய்யப்பட்டு மாணவர்களின் பாவனைக்காக பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸிடம் புதன்கிழமை (10) கையளிக்கப்பட்டன.





# பயிற்சிப் பட்டறை

■ ராஜ்குமார்

எழுத்தாணி பவுண்டேஷன் நிறுவனத்தால் முன்னெடுத்துவரும் இளைஞர்கள் மத்தியில் மத சுதந்திரம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பயிற்சிப்பட்டறை கடந்த திருகோணமலை மல்லிகா விடுதியில் சனிக்கிழமை (07) இடம்பெற்றது.

இப் பயிற்சிப் பட்டறையில் 24 இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர். எழுத்தாணி பவுண்டேஷன் பணிப்பாளர் வடமலை ராஜ்குமார் மற்றும் திட்ட ஆலோசகர் வே.காண்டீபன் ஆகியோருடன் NCEASL அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.





# மௌனத்தின் மொழி பாரன்



பாத்திமா சபா,
மூன்றாம் வருடம்,
ஊடகக‌ற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்



எளிய கதைகள் மூலம் ஆழமான கருத்துகளை வெளிக்கொண்டு வரும் ஈரானிய இயக்குநர் மாஜிக் மஜிதியின் திரைப்படங்கள் என்றும் மனித உணர்ச்சிகளை நுட்பமாக ஆராயக்கூடியது. உலகில் வியாபார நோக்கத்தோடு இயங்கிக் கொண்டிருக்கும் எத்தனையோ திரைப்படங்களுக்குள் யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டு. இயக்குநர் மாஜித் மஜிதினால் 2001ஆம் ஆண்டிலேயே உருவாக்கப்பட்ட திரைப்படமே பாரன்.

இந்தத் திரைப்படமானது உலக திரைப்பட விழாவில் கலந்துகொண்டு சிறந்த திரைப்படத்திற்கான விருதினையும் தட்டிச் சென்றது. பாரன் (Baran) என்பது இத்திரைப் படத்தில் வரும் கதாநாயகியின் பெயராகும். ஆனால், இப்படத்தில் கதாநாயகி அறிமுகமாகும் போது, ரஹ்மத் என்ற பெயரினூடாகவே அறிமுகப்படுத்தப்பட்டிருப்பாள். இந்த திரைப்படமானது ஒரு எளிய காதலின் கதையாகும். ஆப்கான் அகதியான கதாநாயகிக்கும் ஈரான் இளைஞனுக்குமான மென்மையான காதலை மிகவும் கவித்துவமாகப் பேசுகிறது இந்தத்திரைப்படம்.

1990களில் மத அடிப்படைவாதிகளான தாலிபான்கள் ஆப்கானிஸ்தானை கைப்பற்றிய காலத்தைத் தொடர்ந்து ஈரானில் அரங்கேறும் இந்தக் கதை காதலின் இலக்கணத்தைக் கச்சிதமாய் காட்சிப்படுத்துவதோடு, யதார்த்தவாதம் மற்றும் சாமானியர்களின் வாழ்க்கையை ஆராய்கிறது. இத்திரைப்படத்தின் கதாபாத்திரங்கள், பெரும்பாலும் இடத்திற்கும் காலத்திற்கும் பொருத்தமானதாகவே அமைக்கப்பட்டுள்ளன. இத்திரைப்படமானது ஈரானிய சமூகத்தின் பின்தங்கிய நிலையை வெளிக்கொண்டு வருகிறது. குறிப்பாக ஆப்கான் அகதிகள் எவ்வாறு அடிக்கடி வேலைக்காகச் சிக்கலில் சிக்குகிறார்கள் என்பதையும், அவர்களது அடிப்படைத் தேவைகளுக்கான அன்றாட போராட்டங்களையும் படம் எடுத்துக்காட்டியுள்ளது.

இப்படத்தில் protagonist ஆக லத்தீப், ரஹ்மத் (Baran) போன்ற கதாபாத்திரங்கள் காணப்படுகின்றனர். அதேவேளை, Antagonist ஆக ஆப்கானிஸ்தானின் போர் சூழல் மற்றும் வறுமையின் தாக்கங்கள் போன்றன காணப்படுகின்றன.இத்திரைப்படத்தில் கட்டட வேலை செய்ய ஆண் வேடமிட்டு வந்த கதாநாயகியோடு, கதாநாயகன் அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றான். கதாநாயகி பெண் என்றும் குடும்ப வறுமையின் காரணமாக இத்தகைய கரடுமுரடான பணியை மனம் விரும்பாமல் செய்து கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்ததும், கதாநாயகன் லத்தீப்பிற்கு கதாநாயகி பாரன் மீதான கோபம் காதலாக மாறுகிறது. அதன்பின், படம் நெடுகிலும் கதாநாயகி கடினமான வேலைகளைச் செய்யும்போது, தொலைவில் கதாநாயகன் கண்களில் காதலை சுமந்துக் கொண்டு இயலாமையோடு அவளை வெறித்துப் பார்த்தபடி உருகும் காட்சிகள் மனதை வருடுவதாக அமைந்துள்ளது.

முதலில் லத்தீப், பாரனைக் காணும் வேளையில், கோபத்தை வெளிப்படுத்தும் விதமாகவே காணப்படுவான். காரணம் பாரன் ஒரு ஆண் என்ற எண்ணத்தில் அவன் இருந்தான். ஆனால், லத்தீப், ரஹ்மத்தின் அறைக்குள் திரைச் சீலையின் நிழல் வடிவமாக வித்தியாசமான காட்சியொன்றைக் காண்கிறான். தன் நீளமான கூந்தலை வாரிக் கொண்டிருக்கும் இளம் பெண்ணொருத்தியின் நிழல். அது, தான் இது நாள் வரை வெறுத்துக் கொண்டிருக்கும் சிறுவன் ஒரு பெண் என்பதை அறிகிறான். மேலும், அவளை பின் தொடர்கையில் அவளின் சோகத்திற்குப் பின் இருக்கும் வாழ்வியல் சிக்கல்களும், அந்த ஏழைக் குடும்பத்தில் சம்பாதிக்கக் கூடிய நிலையில் இருப்பவள் அவள் ஒருத்தி மட்டுமே என்பதை அறிந்து மிகவும் மனம் வருந்துகிறான். அவளைக் காணாமல் கண்ட நொடியிலிருந்து அவள் மீது ஆழமான காதலில் வீழ்கிறான் கதாநாயகன்.

இத்திரைப்படத்தினுடைய கதை ஓட்டத்தில் திருப்பங்களாய் அமைந்த விடயங்களை நோக்கும் போது முதலாவது plot ஆக பாரன் எனும் பெண் ரஹ்மத் என்ற ஆண் பெயருடன் கட்டட வேலை




செய்வதற்காகக் குறித்த தளத்திற்கு வருதலும், இரண்டாவது ரஹ்மத்துக்கும் லத்தீபிற்கும் இடையில் எதிர்பாராமல் ஏற்பட்ட சண்டையும் அதன் பின்னராக ரஹ்மத் ஒரு பெண் என்று லத்தீபிற்கு தெரிய வருதலும், மூன்றாவது திருப்புமுனையாக அமைவது பாரன் இருக்கும் இடத்திற்குத் தேடிச்சென்று லத்தீப் தனது காதலைக் குறிப்பாக பாரன் மீது கொண்ட அளவு கடந்த அன்பை வெளிப்படுத்த முனைவதையும் குறிப்பிடலாம்.

இத்திரைப்படத்தில் என் மனதை மிகவும் கலங்க வைத்த காட்சியாக இருப்பது ஆப்கான் அகதிகள் மறைந்து வேலை செய்வது அதிகாரிகளுக்குத் தெரிய வர,செக்கிங் ஆபிஸர்கள் திடீரென்று வந்து விடவே ஆப்கான் பணியாட்கள் திருப்பி அனுப்பப்படுகிறார்கள். விடுபட்ட ரஹ்மத்தை ஒரு அதிகாரி கண்டுபிடித்துத் துரத்த அவள் பயந்தோடுகிறாள். இதைக் கண்ட லத்தீப் தானும் விரைவாக அவர்கள் பின் ஓடி, அந்த அதிகாரியிடம் தன் நேசத்திற்குரியவள், சொல்லாத காதலுக்குச் சொந்தக்காரி பாரன் சிக்கிவிடாமல் இருக்கச் சண்டை போட்டு மாட்டிக் கொள்கிறான். அவள் கலங்கிய விழிகளுடன் லத்தீப்பை தன் விழிகளால் நோக்கி நன்றி தெரிவித்தவளாய் தப்பியோடுகிறாள். அதிகாரி அவனை இழுத்துப் போகவே துணை கதாபாத்திரமான மெமோர் பாடுபட்டு அவனைத் திரும்ப அழைத்து வருகிறார். கட்டட வேலை மீண்டும் துவங்கவே தன் நேசத்துக்குரியவளான ரஹ்மத் இல்லாத இடத்தில் தனிமையாக உணர்கிறான் லத்தீப். மாடிக்குச் சென்று அவள் உணவிட்ட புறாக்களைப் பார்த்து ரசிக்கிறான்.

பாரன் மீதான காதலில் லத்தீப் செய்த மறைமுக உதவிகளைத் திரைப்படத்தைப் பார்ப்பவர்களால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும்.திரைப்படத்தில் மறைமுகமாக லத்தீப் செய்த அனைத்து உதவிகள் பற்றியும் யாருக்கும் தெரியாது, பாரனுக்குக் கூட தெரியாது. பாரன் மீண்டும் ஆப்கான் போகும் தினத்தன்று வழியனுப்ப லத்தீப் படபடக்கும் இதயத்துடன் வருகிறான். எல்லாருமாக வண்டியில் ஏறிவிட்டார்கள். பாரன் கையில் வைத்திருக்கும் சாமான்களுடன் மழைப் பாதையில் நடந்து வரும் போது கைதவறி கூடையைக் கீழே போடுகிறாள். அதிலிருந்து காய் கனிகள் சிதறி விழுகிறது. பொறுமையாக பாரனும் லத்தீப்பும் அதைக் குனிந்து பொறுக்கி கூடையில் மறுபடியும் போடுகிறார்கள். கூடையை எடுத்துக் கொண்டு வண்டியில் ஏறிப் போய்விடுகிறாள் பாரன். சோகத்துடன் பாரனின் பாதணிதடம் பதிந்த இடத்தில் மழை நீர் நிறைவதைப் பார்க்கிறான் லத்தீப்.

இத்திரைப்படத்தில் ஆரம்பத்திலிருந்து எந்த ஒரு காட்சியின் பின்னாலும்பின்னணிஇசை ஒலிக்கப் படவில்லை. குறித்த சூழலில் இடம்பெறும்

> **“பாரன் என்பது ஆப்கான் மொழியில் மழை என்று அர்த்தமாகும். இந்த மழையானது பொழியுமே தவிரப் பேசாது. இந்த மழை உணர்த்தும், குளிர்விக்கும், செழிக்க வைக்கும், காதல் கொள்ளச் செய்யும். இந்த குறியீடுகளே மழையின் மொழி. இதே போல இப் படத்தின் கதாநாயகி பாரன் இப்படத்தில் எந்த இடத்திலும் பேசுவதில்லை. ஆனால், அவள் லத்தீப்பிடம் உணர்த்தி விட்டுச் சென்ற உணர்வின் படிமங்கள் காலத்தால் அழிக்க முடியாதவை**

பறவைகளின் ஓசையும் கட்டட வேலையின் சத்தங்களுமே ஒலிக்கப்பட்டன. ஆனால், திரைப்படம் ஆரம்பமாகி 30 வினாடிகளைத் தாண்டிக் கொண்டிருக்கையில், ரஹ்மத் ஒரு பெண் தான் என்று லத்தீபிற்குத் தெரியவரும் வேளையில், அங்கே கதாநாயகி பாரனுக்காகவே படத்தின் பின்னணியில் ஒரு பின்னணி இசை இடம்பெறும். குறிப்பாக ஒரு பதினைந்து வினாடிகள் மாத்திரமே ஒலிக்கப்பட்ட அந்தப் பின்னணி இசை பல உணர்வுகளை அந்த இடத்தில் பதிவு செய்தது என்றே கூறலாம்.

ஆண்கள் வேலை செய்யும் இடத்தில், தான் ஒரு பெண் என்பதைக் காட்டிக்கொள்ளாமல், ஆண் வேடமிட்டு திரைப்படத்தில் கதாநாயகி திரையில் வந்த நேரம் எல்லாம் அவள் வறுமையின் பிடியில் தவிப்பதும், ஒரு பெண்ணாக இருந்து கொண்டு அனைத்தையும் கடக்கும் அவளது திறமையும் திரைப்படத்தில் மிகவும் தத்ரூபமாகவே இடம் பெற்றிருந்தது. அடுத்ததாகத் திரைப்படத்தின் லைட்னிங் மற்றும் camera கையாளுகையைப் பொறுத்த வரைக்கும், அதிகமான நீண்ட Single shots மற்றும் High Angle shots போன்றவை ஊடாக கதாபாத்திரங்களின் உணர்வுகள் மிகவும் அழகாகப் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. மேலும், திரைப்படத்தினுடைய Colour creating மிகவும் இயல்பாகவே பயன்படுத்தப்பட்டிருந்தது.

இத்திரைப்படத்தினுடைய முடிவானது கதாநாயகி பாரன் உட்பட அவளது குடும்பத்தினர் மற்றும் ஆப்கானிஸ்தானிலிருந்து ஈரானில் அகதிகளாகத் தஞ்சமடைந்தோர், மீண்டும் ஆப்கானிஸ்தானுக்குத் திரும்பிச் செல்வதாகும். பாரன் மற்றும் லத்தீப் மீண்டும் இணைவார்களா? இல்லையா? என்ற கேள்வி நிலையிலே படத்தின் முடிவு பார்வையாளர்களின் கையில் விடப்படுகிறது. இதனால் இப்படத்தின் முடிவு திறந்த முடிவாக அமைகின்றது.

குறிப்பாக சொல்வதாயின், பாரன் என்பது ஆப்கான் மொழியில் மழை என்று அர்த்தமாகும். இந்த மழையானது பொழியுமே தவிரப் பேசாது. இந்த மழை உணர்த்தும், குளிர்விக்கும், செழிக்க வைக்கும், காதல் கொள்ளச் செய்யும். இந்த குறியீடுகளே மழையின் மொழி. இதே போல இப் படத்தின் கதாநாயகி பாரன் இப்படத்தில் எந்த இடத்திலும் பேசுவதில்லை. ஆனால், அவள் லத்தீப்பிடம் உணர்த்தி விட்டுச் சென்ற உணர்வின் படிமங்கள் காலத்தால் அழிக்க முடியாதவை. நிறைவேறாத ஆசைகள், வாழ்வின் எதிர்பார்ப்புகள் எத்தனை, எத்தனை எல்லோர் வாழ்விலும்? நாடோடியாகச் சுற்றித் திரிந்த லத்தீப்பை காதல் எனும் உணர்வு மனித நேயனாக்குகிறது. வாழ்வின் அழகான ஒரு பகுதியை நம் கண்முன் நிறுத்துகிறது இத்திரைப்படம். எனவேதான் நான் பார்த்த திரைப்படங்களில் என் மனதைத் தொட்ட ஒரு திரைப்படமாக பாரன் திரைப்படமும் காணப்படுகின்றது.



# பண்டார வன்னியன்

சு.டிலேஜா,
ஊடககற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்



தாய் மண்ணின் விடுதலைக்காக இறுதிவரை போரிட்டு தன்னுயிர் துறந்த மாவீரன் இலங்கையின் ஒரு பகுதியான வன்னி நிலப்பரப்பை ஆண்ட அடங்காப்பற்று குலசேகரம் வயிரமுத்து பண்டாரவன்னியனின் வீரத்தை பறைசாற்றும் வண்ணம் முல்லைமணவே. சுப்பிரமணியம் அவர்களால் நாடகமாக இயக்கப்பட்டு பின்னர் 1970இல் நூலாக்கப்பட்டது இப்படைப்பு.

**“வன்னிநிலம் அந்நியருக்கடங்காதென்னும் வாய்மைதனைஅடக்கிவிட முடியாது”**

‘பண்டார வன்னியன்’ எனும் நூலானது முக்கியமாக வரலாற்றுபாற்றகையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. ‘முல்லை மணியின் பண்டார வன்னியன்’ என்னும் நூலானது வரலாற்று நாடக நூலக காணப்படுகின்றது. இதன் ஆசிரியர் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம். இந்நூலானது பண்டார வன்னியனின் கழகத்தினால் 95 பக்கங்கள் உடையதாக 1970ஆம் ஆண்டு ஆனி மாதம் வெளியீடு செய்யப்பட்டது. பண்டார வன்னியம் தமிழ் நாட்டின் புகழ் பெற்ற சித்திரவாணன் தலைவர்களில் ஒருவராக விளங்கினார்.

பண்டார வன்னியனின் முழுப்பெயர் குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன் அவரின் வாழ்க்கை போராட்டங்கள் மற்றும் விடுதலைக்காகக் கொண்டிருந்த உறுதியைப் பற்றிப் பல புத்தகங்கள் வெளியாகின்றன. அந்த வகையில், ‘பண்டார வன்னியன்’ எனும் நூலை வாசிக்கும்போது, அதன் பின்புலம், கதைக்கரு, படைப்பின் தரம், அதன் தாக்கம் பற்றி விமர்சிக்க உந்துகின்றது.

‘பண்டார வன்னியன்’ எனும் நூலின் கதாநாயகனாகக் காணப்படுபவர் பண்டார வன்னியன் ஆவார். இந்த புத்தகத்தின் கதாபாத்திரத்தின் தன்மை பற்றி நோக்கும்போது, பண்டார வன்னியன் வன்னி நாட்டு இறுதி அரசரும் வன்னி நாட்டை ஆண்ட இறுதி மன்னருமாகக் கூறப்படுகின்றது. இவரின் போர் தன்மை மிகவும் வியக்கத்தக்க வகையில் இதில் கூறப்பட்டுள்ளது. இவர் மக்களை காக்கவும் அவர்களின் உரிமைகளை நிலைநாட்டவும் உறுதியான ஒரு தலைவனாக இருந்ததாகவும் அவரது வீரத்தையும் துணிச்சலையும் கொண்ட தலை சிறந்த போராளியாகவும் தலைவனாகவும் எடுத்துக் காட்டிப்பட்டுள்ளது.

இந்நூலின் கதைக்களம் பற்றி நோக்கும்போது, 18ஆம் நூற்றண்டில் இறுதிப் பகுதியில் பண்டார வன்னியன் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகக் களத்தில் இறங்கியதை குறித்து நிற்கிறது. இந்த நூல் எழுதுவதற்கு ஆதாரமாக கற்சிலை மருவில் உள்ள பண்டார வன்னியன் சிலைக் கல்லும், கர்ண பரம்பரை கதை கூறியமை சி.உ.நடனசபாவதி அவர்களும் நூல் எழுதுவதற்குத் துணை புரிந்தார்.

பண்டார வன்னியன் என்னும்

> **“‘பண்டார வன்னியன்’ என்னும் நூலின் ஆசிரியரான வே.சுப்பிரமணியம் என்பவரின் கண்ணோட்டத்தின் ஊடக இந்த நூல் பற்றி நோக்கும்போது, ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டு காலமாகக் கவனிப்பார் அற்று கிடந்த கற்சிலை கூறும் செய்தியைப் பண்டார வன்னியன் வரலாற்று ஆராய்ச்சிக்குத் தூண்டு கோலாக அமைந்தது என்று அவர் தனது கருத்தை இந்நூலில் கூறியிருந்தார்**

நூலின் கதைக் கருவைப் பற்றிப் பார்க்கும் போது, பண்டார வன்னியனின் வாழ்க்கை அனுபவங்கள், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடனான மோதல்கள், அவருடைய போராட்டங்கள், மன்னனுக்கும் மக்களுக்கும் சேவகர்களுக்கும் இடையிலான உறவுகள், இறுதியில் அவனது வீர மரணம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. மேலும், அவர் வன்னி மண்ணின் மீது கொண்டிருந்த அன்பு மற்றும் அடிமைத்தனத்திற்கு எதிராக அவர் எடுத்த முடிவுகளை உணர்வுப்பூர்வமாகச் சித்திரித்துக் கூறுகின்றது.

இந்த நூலின் கதாபாத்திரங்கள் பற்றி எடுத்து நோக்கும்போது, பண்டார வன்னியனின் வீரம் நேர்த்தியாகச் சித்திரிக்கப்படுகின்றது. பிரதான கதாபாத்திரங்களாகப் பண்டார வன்னியன், கைலாய வன்னியன், பெரிய மெயினார், நல்லநாச்சன், பெருவன்னிச்சி, குமாரசிங்க வன்னியன், காக்கை வன்னியன், வொன்அவ்கின்பீக், காப்டன்வொற்டிறிபேக், லெப்டினன்ட், யுவெல்எம்வேட்மெட்ச்நோத், மல் அதிகாரி, தூதுவர், படை வீரர், பொது மக்கள் ஆகியோர் காணப்பட்டனர். கதை சொல்லும் முறையிலும் சம்பவங்களின் சித்திரிப்பிலும் ஆழமான இரசனை வெளிப்படுத்தப்படுகின்றது.

இந்த நூலின் மொழி நடை பற்றி நோக்கும்போது, மிகவும் ஆழமான தமிழ் மொழி சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எளிமையான மொழி நடை, படைப்பின் பாணி வாசகர்களை கவரும் வகையில் அமைந்துள்ளது. இந்த நூலின் எழுத்துக்கள் பண்டைய கால எழுத்து வடிவில் எழுதப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

‘பண்டார வன்னியன்’ என்னும் நூலின் தாக்கத்தைப் பார்க்கும் போது, விடுதலை போராட்டங்களில் பண்டார வன்னியன் கொண்ட இடத்தை வலியுறுத்திக் காட்டுகின்றது. தமிழர் வரலாற்றில் மிகவும் முக்கியமான ஆளுமை கொண்டவர் என்பதை வாசகர்களுக்கு வழங்குகின்றது. பண்டார வன்னியன் வரலாற்றைப் பற்றித் தெரியாதவர்களுக்கு இந்த புத்தகம் ஒரு முக்கியமான பகுதியாக அமைகிறது. இந்தநூலின் ஊடாக தமிழர் விடுதலை போராட்ட வரலாற்றில் பண்டார வன்னியனின் முக்கியத்துவத்தை மீண்டும் ஒருமுறை உணர்த்துகின்றது.

‘பண்டார வன்னியன்’ என்னும் நூலின் ஆசிரியரான வே.சுப்பிரமணியம் என்பவரின் கண்ணோட்டத்தின் ஊடக இந்த நூல் பற்றி நோக்கும்போது, ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டு காலமாகக் கவனிப்பார் அற்று கிடந்த கற்சிலை கூறும் செய்தியைப் பண்டார வன்னியன் வரலாற்று ஆராய்ச்சிக்குத் தூண்டு கோலாக அமைந்தது என்று அவர் தனது கருத்தை இந்நூலில் கூறியிருந்தார். இதன் பின்னணியிலே 1964இல் இந்நூல் வடிவம் பெற்றது.

நியூயோர்க்

ட்ரம்ப் மற்றும் கமலா இடையே

# அனல் பறக்கும் தேர்தல் விவாதம்

“அரசியலமைப்பின் மீது ட்ரம்புக்கு எந்த மரியாதையும் இல்லை. பொருளாதாரத்தை சீரழித்த அவர், மீண்டும் ஜனாதிபதியானால், தன் மீதான வழக்குகளில் இருந்து தப்பித்து விடுவார்” என்று நேரடி விவாதத்தில் கமலா ஹாரிஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

பதிலுக்கு பேசிய ட்ரம்ப், “அமெரிக்கா தற்போது செல்லும் பாதையில் சென்றால், மூன்றாம் உலகப்போர் நிச்சயம் வரும். கமலா ஹாரிஸ் தான் அமெரிக்க வரலாற்றிலேயே மிக மோசமான துணை ஜனாதிபதி. உக்ரைன் - ரஷ்யப் போரை அவர் தடுக்கத் தவறிவிட்டார்” என்றார்.



அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான தேர்தல், எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், மற்றும் ஜனநாயக கட்சி சார்பில் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் போட்டியிடுகின்றனர்.

இந்நிலையில், இருவரும் முதன்முறையாக புதன்கிழமை (11) பென்சில்வேனியா மாகாணம், பிலடெல்பியா நகரிலுள்ள செய்தி நிறுவனம் ஒன்று நடத்திய விவாதத்தில் பங்கேற்றுள்ளனர்.

குறித்த விவாதத்தின் போது, இருவரும் தமது கருத்துகளை அள்ளி வீசியுள்ளனர்.

ட்ரம்ப் - ஹாரிஸ் நேரடி விவாதம் களை கட்டிய நிலையில், இந்த விவாதத்துக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# பராகுவேயிடம் தோற்ற பிரேஸில்

## ஆர்ஜென்டினாவை வென்ற கொலம்பியா

தென்னமெரிக்க கால்பந்தாட்டச் சம்மேளன உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில், பராகுவேயில் புதன்கிழமை (11) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் பிரேஸில் தோல்வியடைந்தது.

பராகுவே சார்பாகப் பெறப்பட்ட கோலை டியகோ கோமிஸ் பெற்றிருந்தார்.

இதேவேளை தம்நாட்டில் நடைபெற்ற ஆர்ஜென்டீனாவுடனான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் கொலம்பியா வென்றது. கொலம்பியா சார்பாக யெர்சன் மொஸ்குவேரா, ஜேம்ஸ் றொட்றிகாஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஆர்ஜென்டீனா சார்பாகப் பெறப்பட்ட கோலை நிக்கொலஸ் கொன்ஸலேஸ் பெற்றார்.



இந்நிலையில், வெனிசுவேலாவில் நடைபெற்ற அவ்வணிக்கும், உருகுவேயிக்கிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.


இதேவேளை, தம்நாட்டில் நடைபெற்ற பொலிவியாவுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் சிலி தோல்வியடைந்தது. பொலிவியா சார்பாக கர்மெலோ அல்கரனஸ், மிகேல் டெர்செரோஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, சிலி சார்பாகப் பெறப்பட்ட கோலை எடுவார்டோ வர்காஸ் பெற்றிருந்தார்.

இந்நிலையில், தம்நாட்டில் நடைபெற்ற பெருவுடனான போட்டியில் இன்னர் வலென்சியா பெற்ற கோலோடு 1-0 என்ற கோல் கணக்கில் ஈக்குவடோர் வென்றது.

சீனா

பற்களை பிடுங்கியதால்

# மாரடைப்பு ஏற்பட்டு மரணித்த நபர்



சீனாவை சேர்ந்த ஒருவருக்கு ஒரே நாளில் 23 பற்கள் பிடுங்கி விட்டு 12 பற்களை மீண்டும் பொருத்தி சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை முடிந்து 13 நாட்களின் பின்னர், மாரடைப்பு ஏற்பட்டு அந்நபர் உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சீனாவின் ஜெஜியாங் மாகாணத்தைச் சேர்ந்த ஹூவாங் என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார். சிசிச்சைக்குப் பிறகு, ஹூவாங்கிற்கு தொடர்ந்து வலி உணரப்பட்டு வந்துள்ளது. இருப்பினும் அதற்கென அவருக்கு சிகிச்சை ஏதும் அளிக்கப்பட்டதாக தெரியவில்லை.

இந்நிலையில்தான், கடந்த ஆகஸ்ட் 28ஆம் திகதி அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்படவே, அதில் அவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.


இது குறித்து ஹூவாங்கின் மகள் தெரிவிக்கையில், “இவ்வளவு சீக்கிரம் என் தந்தை எங்களை விட்டுச் செல்வார் என நினைக்கவில்லை. நாங்கள் வாங்கிக்கொடுத்த புதிய காரைக் கூட அவரால் ஓட்டமுடியாமல் போய்விட்டது” என வேதனையுடன் தெரிவித்தார்.

இது குறித்து, மருத்துவமனையின் பல் மருத்துவ மையத்தின் இயக்குநர் சியாங் குயோலின் தெரிவிக்கையில், “பொதுவாக ஒரே நேரத்தில் பிரித்தெடுக்கூடிய பற்களின் எண்ணிக்கை அதிகபட்சம் எவ்வளவாக இருக்க வேண்டும் என்பது குறித்து அதிகாரப்பூர்வ வழிகாட்டுதல்கள் எதுவும் இல்லை. இருப்பினும், பொதுவாக 10 என்று எடுத்துக்கொள்ளலாம்.

அப்படியிருக்கையில், ஒரே நாளில் 23 பற்கள் என்பது மிகவும் அதிகம். இதற்கென்று போதுமான அனுபவத்துடன் ஒரு மருத்துவமனை மற்றும் மருத்துவர் தேவை. மேலும், சிகிச்சைப்பெறுபவரின் உடல் திறனையும் கருத்தில் கொள்ள வேண்டும்” என்றுள்ளார்.

ஆகவே, இதனாலேயே அவருக்கு மாரடைப்பு ஏற்படிருக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது. இந்நிலையில், இவரது மரணம் உலகளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மெல்போர்ன்



சிறுவர்கள் சமூக வலைத்தளங்களை

# பயன்படுத்த தடை

அவுஸ்திரேலியாவில், சமூக வலைத்தளங்களை பயன்படுத்த சிறுவர்களுக்கு தடை விதிக்க சட்டம் இயற்றப்படவுள்ளது.

இது குறித்து அந்நாட்டு பிரதமர் அந்தோணி அல்பனீஸ் கூகையில், “சிறுவர்கள் சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவதை தடை செய்யும் சட்டத்தை இந்த ஆண்டு அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளோம். எந்த வயது சிறுவர்களுக்கு தடை விதிப்பது என்பது குறித்து, வயது சரிபார்ப்பு சோதனை விரைவில் ஆரம்பிக்கப்படும்” என்று தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி

“மாணவிகளுக்கு பாலியல் துன்புறுத்தல்”

# மதபோதகர் கைது



கிருஷ்ணகிரியில் போலியான என்.சி.சி. முகாம் நடத்தி, பாடசாலை மாணவிகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட விவகாரத்தில், மதபோதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிருஷ்ணகிரி தனியார் பாடசாலைகளில், மாணவிகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட வழக்கை, சிறப்பு புலனாய்வு குழுவினர் விசாரித்து வந்த நிலையில், முக்கிய குற்றவாளியான சிவராமனின் நெருங்கிய நண்பரான டேனியல் அருள்ராஜை அக்குழுவினர் கைது செய்தது.

ஜிம் மாஸ்டராகவும், மத போதகராகவும் இருந்து வந்த டேனியல் அருள்ராஜ், சிவராமனின் குற்றச் செயல்களுக்கு உடந்தையாக இருந்ததாக கூறப்படுகின்றது.

இதுவரை இந்த வழக்கில், தனியார் பாடசாலையின் பெண் முதல்வர், மாவட்ட என்.சி.சி. ஒருங்கிணைப்பாளர், நாம் தமிழர் கட்சியின் முன்னாள் நிர்வாகி என 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை

# பாடகர் மனோ மகன் மீது புகார்

மதுபோதையில் தாக்கியதாக பின்னணி பாடகர் மனோ மகன் மீது பொலிஸில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

சென்னை ஆலப்பாக்கத்தை சேர்ந்த 20 வயதான கிருபாகரன், நிதிஷ் ஆகிய இருவரும், வளசரவாக்கம் அருகில் உள்ள உணவகத்திற்கு சென்று வரும் வழியில், அங்கு நின்றுகொண்டிருந்த 5 பேர் கொண்ட கும்பல் அவர்கள் இருவரிடமும் தகராறில் ஈடுபட்டு இருவரையும் சரமாரியாக அடித்து உதைத்துள்ளது.

இதில் கிருபாகரனின் பின்னந்தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. தாக்குதல் நடத்திய கும்பல் மது போதையில் இருந்ததாக கூறப்படுகிறது. தகவலறிந்து வளசரவாக்கம் பொலிஸார் சம்பவ இடம் விரைந்து கிருபாகரன் மற்றும் நிதிஷ் ஆகிய இருவரையும் மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். மேலும், தாக்குதல் நடத்திய நபர்கள் குறித்து விபரங்களை சேகரித்தனர்.

விசாரணையில், தாக்குதல் நடத்தியது பிரபல பின்னணி பாடகர் மனோவின் மகன் உள்ளிட்ட 5 பேர் என்பது தெரிய வந்துள்ளது. இந்த விவகாரம் குறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

ஹட்டன் சதுரங்க சம்மேளனத் தொடர்:

# ஹோல்புறூக் பிரகாசிப்பு

■ செ.தி.பெருமாள்

ஹட்டன் சதுரங்க சம்மேளனத்தால் நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில், ஹோல்புறூக் தமிழ் மகா வித்தியாலய மாணவர் பிரகாசித்துள்ளனர்.

கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் செவ்வாய்க்கிழமை(10) நடைபெற்ற இப்போட்டியில், ஹோல்புறூக் தமிழ் மகா வித்தியாலய மாணவரின் தரநிலைகள் பின்வருமாறு,

ஜெ. சரனாகவி (9ஏ) - இரண்டாமிடம்
ஜெ. வர்ஷா (10டி) - மூன்றாமிடம்
ஜெ. ரித்திகா (8பி) - மூன்றாமிடம்
வி. சஞ்ஜீவனி (8டி) - நான்காமிடம்
எஸ். பவிஷான் (9டி) - ஐந்தாமிடம்
என். டில்மா (8பி) - ஐந்தாமிடம்
எம். ரபிஷான் (8டி) - ஆறாமிடம்
டி. டிலுக்சியா (8டி) - ஏழாமிடம்
என். லதுஷிகன் (7ஏ) - எட்டாமிடம்
ஆர். ஹர்ஷியா (8ஏ) - எட்டாமிடம்



# வெற்றி தோல்வியின்றி முடிந்தது வீரர்களின் போர்

■ எஸ்.தில்லைநாதன்

வீரர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிகளிடையேயான 22ஆவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், 12 விக்கெட்டுகளை வீழ்த்தியதுடன், 34 ஓட்டங்களைப் பெற்ற மகாஜனாவின் உ.ஜோவெல் றொசான், சிறந்த பந்துவீச்சாளர், சிறந்த சகலதுறை வீரர், போட்டியின் நாயகனாகத் தெரிவானார்.

சிறந்த துடுப்பாட்ட வீரராக ஸ்கந்தவரோதயவின் கே.டிலக்சன், சிறந்த களத்தடுப்பாளராக அதே கல்லூரியின் எஸ்.கேதுசன் ஆகியோர் தெரிவாகினர்.

மெய்வல்லுநர் போட்டியில்

# முதலிடம் பெற்ற ஹின்ஸான்

■ எம்.எஸ்.எம்.ஸாகிர்



கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியானது மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற நிலையில், ஞாயிற்றுக்கிழமை(08) நடைபெற்ற 12 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில், நிந்தவூர் அல்-அஷ்ரக் மாணவன் எம்.எச்.முஹம்மது ஹின்ஸான் முதலிடம் பெற்றார்.

போட்டித் தூரத்தை 13.30 செக்கன்களில் ஹின்ஸான் கடந்திருந்தார்.

தேசங்களுக்கான லீக்:

# சமநிலையில் ஜேர்மனி – நெதர்லாந்து போட்டி

தேசங்களுக்கான லீக் தொடரில், நெதர்லாந்தில் புதன்கிழமை(11) நடைபெற்ற அவ்வணிக்கும் ஜேர்மனிக்குமிடையிலான குழு சி போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

ஜேர்மனி சார்பாக, டெனிஸ் உன்டவ், ஜோஷுவா கிம்மிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். நெதர்லாந்து சார்பாக டிஜ்ஜானி றெஜின்டர்ஸ், டென்ஸில் டம்ப்பிறைஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 12, செப்டெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.